**Dated : 09.01.2025**

**O.S.No. 100/2019**

**PW.1 – திருமதி. சுமித்ரா**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் பர்கூர் அங்கிநாயனப்பள்ளியில் உள்ள பெண்கள் கல்லூரியில் சமையல்காரராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு கிடைத்த இந்த பணியானது கணவரால் கைவிடப்பட்டதால் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. எனக்கு மாதம் ரூ.20,000/-. நான் என் தாயார் வீட்டில் வசித்து வருகிறேன். நானும், என் கணவருடன் 2 வருடம்ஐகுந்ததத்தில் சேர்ந்து வாழ்ந்தேன், பின்னிட்டு என் தாயார் வீட்டில் வசித்து வருகிறேன். என் கணவர் பி.எட். படிப்பு முடித்துள்ளார். எனக்கு திருமணம் நடக்கும் போது டிராக்டர் டிரைவர் ஆக பணிபுரிந்து வந்தார் என்றால் டிராக்டர் டிரைவராகவும், ஜே.சி.பி. வண்டியும் ஓட்டிவந்தார். என் கணவருக்கு ஜே.சி.பி. வாகனம் ஓட்ட தெரியாது என்றால் சரியல்ல. எனது முதல் குழந்தை எனக்கு 8 மாதங்களில் பிறந்தது. என் கணவருக்கும், எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் தற்போது நாங்கள் பிரிந்து வாழ்கிறோம். பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் பேசப்பட்டது, என்ன பேசப்பட்டது என்றால் என் கணவர் பஞ்சாயத்தில் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக கூறினார். என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக பஞ்சாயத்தில் கூறியிருந்தாலும், நான் அவருடன் செல்ல மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

நான் பஞ்சாயத்து பேசிய அன்று நானும், எனது தாயாரும், என் அண்ணன் ஆகியோர் கடந்த 2016ம் வருடம் எனது கணவரை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக என் கணவர் பர்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் புகார் கொடுத்துள்ளார், ஆனால் அது பொய் புகாராகும். எனது கணவருக்கு முதுகு தண்டில் அறுவை சிகிச்சை செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் விபத்தில் அவரது குதிகால் எலும்பானது உடைந்துள்ளது என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இந்த விபத்தினால் தான் எனது கணவருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு அவர் வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த விபத்தில் அவருக்கு அதிக கடன் ஏற்பட்டது என்றும், எனது கணவர் அவர் வைத்திருந்த டிராக்டரை விற்றுவிட்டார் என்றால் அந்த டிராக்டரானது என் கணவருக்கு சொந்தமானது அல்ல, அவரது பங்காளிக்கு சொந்தமானது. பிரதிவாதிக்கு மேற்படி நிகழ்வினால் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் கடன் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

தாவா சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ள பி செட்டியூல் 1வது அயிட்ட சொத்தானது மாந்தோப்பு என்றால் சரிதான். அந்த சொத்தானது எனது கணவருக்கு அவருடைய குடும்பத்தில் ஏற்பட்ட பாக பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்து என்றால் சரிதான். தாவா பி செட்டியூலில் 2வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தானது, எனது மாமியாரின் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தை எனது மாமனார் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பி செட்டியூல் 2வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 80 சென்ட் என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 80 சென்ட் நிலத்தில் எனது மாமியாருக்கு 60 சென்ட் நிலமும், எனது மாமியாரின் சகோதரிகளுக்கு தலா 60 சென்ட் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மாமனார், எனது மாமியாரின் சகோதரிகளுக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 20 சென்ட் நிலத்தை எனது மாமனார் விலை கொடுத்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் இறந்த பின்னிட்டு 2009ம் வருடம் என் கணவரும், அவருடன் பிறந்த சகோதரர்களும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது கணவருடன் எனக்கு திருமணம் 2013ல் நடப்பதற்கு முன்பாகவே 2009ல் எனது கணவருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். கடந்த 2012ல் பி செட்டியூல் 2வது அயிட்டத்தில் காட்டப்பட்டுள்ள 2 அயிட்ட சொத்துக்களான 3200 சதுரடி நிலத்தை 2012ம் வருடமே எனது கணவர் வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. பி செட்டியூல் 2வது அயிட்ட சொத்தில் 40 சென்ட் நிலத்தை எனது கணவர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 2ம் பிரதிவாதிக்கு கிரய உடன்படிக்கை பத்திரம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்த உடன்படிக்கை படி ரூ.5.00 இலட்சம் முன்பணத்தை என் கணவர் 2வது பிரதிவாதியிடமிருந்து பெற்றுள்ளார் என்றால் அது தவறு.

2வது பிரதிவாதிக்கு எனது கணவர் ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரய உடன்படிக்கை பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு செய்திருந்தால் அது தவறு. தாவா சொத்தானது எனது கணவருக்கு தனிப்பட்ட சொத்து என்றாலும், நான் மேற்படி சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று பொய்யாக கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி செட்டியூல் 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களில் இருந்து வருமானம் எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்திலிருந்து வருடத்திற்கு ரூ.50,000/–

குத்தகை மூலம் எனது கணவர் வருமானம் ஈட்டிவருகிறார். அதை காட்ட ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிராதிலும், எனது முதல் பிரமாண பத்திரிக்கையிலும் எனது கணவர் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறார் என்று சொல்வது தவறு என்றாலும், எனது கணவர் தான் பிற நபர்களிடமிருந்து வட்டிக்கு கடன் பெற்று வருகிறார் என்றாலும் சரியல்ல.

அவ்வாறு எனது கணவருக்கு கடன் ஏற்பட்டதால் தான் தாவா பி செட்டியூல் 2வது அயிட்ட சொத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் செய்து வந்த தொழில் நளிந்து போய்விட்டதால் அவர் மாதம் ரூ.10,000/- வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவரும், அவரது குடும்பத்தாரோ என்னிடம் வரதட்சணை ஏதும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரை விட நான் அதிகமாக சம்பாதித்து வருவதால், எனது கணவர் எனக்கு பராமரிப்பு தொகை வழங்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என் கணவருக்கு தனிப்பட்ட பாத்தியப்பட்ட சொத்து என்பதால், நான் தாக்கல் செய்துள்ள தாவாவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.